# தேம்பாவணியில் தாவரயினங்கள்

*முனைவர் ஆ. ஜெபா கிறிஸ்டி*
உதவிப்பேராசிரியர்
கேஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

ஆதி மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டான். நமது பாரத தேசம் மனிதன் வாழ்வதற்குத் தேவையான எல்லா இயற்கை வளங்களையும் பெற்றுள்ளது. தமிழ்க் காப்பியங்களைத் தழுவி எழுதப் பெற்றது தேம்பாவணி ஆகும். பாலத்தீனம், எருசலேம் நகரத்தை வாழ்விடமாகக் கொண்ட மக்களின் வாழ்வியல் இக்காப்பியத்தில் இடம் பெறுகிறது. நிலத்திற்கு அழகையும் குளிர்ச்சியையும் தரும் தாவரயினங்கள் குறித்த செய்திகளை வீரமா முனிவர் தமிழ்நாட்டு சுழலுக்கு ஏற்ப தம் காப்பியத்தில் பதிவு செய்யும் திறத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6477

## தாவர இனங்கள்

உயிரினங்கள் அனைத்துள்ளும் தாவர இனம் மட்டுமே உணவைத் தானே தயாரித்துக்கொள்ளும் இயல்புடையது. தாவர இனங்கள் பிற உயிரினங்கள் அனைத்திற்கும் அடிப்படை உணவுப் பொருளாகும். தாவர இனம் என்பது மரம், செடி, கொடி, புல் போன்றவற்றை குறிப்பிடுகின்றது. தாவரங்களைப் பற்றி சீனிவாசன்,

“மனித வாழ்விற்கு அடிப்படையான ஒன்று தாவரங்கள். உலகில் மனித இனம் உண்டாகி முப்பது இலட்சம் ஆண்டுகள் கூட இருக்காது. ஆனால், தாவர இனம் உண்டாகி எட்டு ஒன்பது இலட்சம் ஆண்டுகளுக்கும் அதிகமாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். நாம் பார்க்கும் உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட பிறப்பு தாவர இனத்தைச் சார்ந்ததாகும் என்பர்” (கு.சீனிவாசன், சங்க இலக்கித் தாவரங்கள், ப.557) எனக் கூறுகின்றார். மரம், செடி, கொடி, புல் என்ற தாவர இனங்கள் அனைத்தும் ஓர் அறிவு உடையன என்பதை,

**“புல்லும் மரனும் ஓரறி வினவே**
**பிறவும் உளவே அக்களைப் பிறப்பே”(தொல்.பொருள்.நூ.28)**

என்ற தொல்காப்பிய நூற்பா வலியுறுத்துகின்றது. தாவரங்கள் உடம்பினால் அறியும் அறிவு படைத்தவை என்பதை சுட்டிக் காட்டுகினறது.

### மரங்கள்

மரங்கள் நல்ல காற்றைத் தருகின்றன. மழை பொழிய காரணமாகின்றன. பறவைகளின் இருப்பிடமாகின்றன. உள் வயிரமுடையவை எல்லாம் மரம் எனப் பெயர்பெறும் என்கிறது தொல்காப்பியம். இதனை,

**"அகக்கா ழனவே மரமெனப் படுமே."**

**(தொல்.பொருள்.நூ.87)**

என்ற நூற்பா சுட்டுகின்றது. மரத்தைப் பற்றி கலைக்களஞ்சியத்தில்,

"வளரியல்பு அடிப்படையில் அமைந்த வகைப்பாட்டில் முதன்மை பெறுவது மர இனமாகும். பொதுவாக, மரஇனம் அதன் கண் அமைந்திருக்கும் வலிமையுடைய உள்ளீட்டைக் கொண்டே உடையதும் வரையறுக்கப்படுகிறது. திண்மையான உள்ளீட்டை உடையதும் பல்லாண்டுகள் வாழ்வதும் அடிமரம் உள்ளதும், பதினைந்திலிருந்து இருபதடி உயரமேனும் வளர்வதுமாகிய தாவரம் மரம் என்று தாவரவியலார் குறிப்பிடுவர்".

(கலைக்களஞ்சியம், தொகுதி-8, ப.108)

எனக் கூறப்பட்டுள்ளது.

### மரங்களின் உறுப்புகள்

மரங்கள் இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு போன்ற உறுப்புகளைப் பெற்றுள்ளன. இதனை,

**"இலையே முறியே தளிரே தோடே**
**சினையே குழையே புவே அரும்பே**
**நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்**
**மரனொடு வரூஉங் கிளவி என்ப"**

**(தொல்.பொருள்.நூ.89)**

என்ற நூற்பா சுட்டுவதைக் காண முடிகின்றது.

### சண்பக மரம்

சண்பக மரம் கிளைத்துப் பரவி ஓங்கி வளரும் தன்மையுடையது. சண்பக மலர் மஞ்சள் நிறமானது. மிகுந்த நறுமணம் உடையதாயிருக்கும். இம்மலர்பெரிரிய மரத்தில் பூக்கும் தன்மையுடைது. சண்பக மரம் தமிழ்நாட்டில் சில இடங்களில் வளர்கிறது. திருக்குற்றாலத்தில் இம்மரம் காணப்படுகிறது. இது குளிர்ந்த பகுதிகளில் வளரும் தன்மையுடையது. இதன் மலரை மலைக்குரிய மலர்என்பர். வானவர்கள் வண்டு அணுகாத மலர்களை வேத விதிகளைத் தொடுத்த மாலைபோல் கட்டி மரியன்னையை வணங்குகிறார்கள். சண்பக மலர்உண்மையின் குறியீடாக உவமை வழி காட்டப்படுவதை,

**"மைத்திறத்தால் விரிசிறகை யோச னித்த**
**வண்டகணுகாச்சண்பகவந் தொடையை யன்றே**
**மெய்த்திறத்தான் மறைதொடுத்த தொடையை லென்னா**
**விசித்தணிந்தார் தாள்வணங்கி யொருநூ றன்றோ"**

**(தேம்.ஐயம் நீக்கு படலம்.பா.வ.எண்.5-8)**

என்ற அடிகள் சுட்டுகின்றன.

### புன்னை மரம்

புன்னை ஓர் அழகிய சிறு மரமாகும். இது கடற்கரை ஓரத்திலும்இ உப்பங்கழிக் கரையிலும் வளரக்கூடியது. நெய்தல் திணைக் குரிய மரமாக சங்க இலக்கியம் இதனைக் குறிப்பிடுகிறது. புன்னைமரத்தின் இலைகள் கரும்பச்சை நிறமானது. இதன் இலைகள் உதிராது. இதன் அரும்புகள் வெள்ளிய முத்தை ஒத்தவையாயிருக்கும். புன்னை மலரில் நறுமணம் மிகுதியாக வெளிப்படும். இதன் மலர்களை மாலையாகத் தொடுத்துச் சூடினர் என்பதை,

**"நாகநீல் நெற்றிதூங்கு நல்மணி ஓடை போன்று**
**நாகநீல் நெற்றிநாறு நல்மலர்அணியாய்ச் சூழ்ந்த"**

**(தேம்.மகனேர்ந்த படலம். பா.வ.எண்.1-2)**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

### மகிழ மரம்

மகிழ மரம் நல்ல நீருள்ள பகுதிகளில் வளரக்கூடியது. இது நன்கு செழித்து வளரும் தன்மையுடையது. இதன் மலர்கள் அழகானதாயிருக்கும். மிகுந்த நறுமணம் கொண்டிருக்கும். மகிழம் பூவின் மணம் தேனாலும், மணத்தாலும் காட்டிலுள்ள எவ்வகை மலரையும் வெல்லும் தன்மையை,

**"தேன் ஆரும் மலர்இனத்துள் புன்மை கொண்டு**
**தேற லொடும் மணத்தினொடும் எவையும் வெல்லும்**
**கான் ஆரும் வகுளம் பு மாலை தாள்மேல்**
**களிப்பு எழ இட்டு இறைஞ்சுகின்றார்."**

**(தேம்.ஐயம் நீக்கு படலம்.**
**பா.வ.எண்.9-12)**

என்ற அடிகள் சுட்டுகின்றன.

### பாக்கு மரம்

பாக்கு மரங்கள் உயரமாக வளரக்கூடியன. இது அடர்ந்த காடுகளிலும் குளிர்ச்சியான மலைப்பகுதிகளிலும் அதிகமாகக் காணப் படுகிறது. இம்மரங்கள் மருந்துக்குப் பயன்படுகின்றன. இதிலிருந்து கிடைக்கும் பாக்கு, அதன் பட்டைகள் மருந்துப் பொருளாகவும் உபயோகப்பொருளாகவும் பயன்படுகிறது. பாளை கொண்ட பாக்கு மரம் சாய்ந்து விழுந்ததால் பலாப் பழம் அறுந்து விழுந்து தேனைத் துளிப்பது வேசியின் வாயினின்று பிறக்கும் பொய்க்கு ஒப்பிடப்படுகிறது. இதனை,

**"கோள்ஐ வாய்ப்புகழ் தரக் கோல வானவர்**
**பாளை வாய்க்கமுகு பாய் பலவின் காய்அறச்**
**சூளை வாய்ப் பொய் எனத் துளித்த தேன் செயும்**
**மூளை வாய்த் தண் பொழில் கடந்து முன்னினார்"**

**(தேம்.மகவருள் படலம்.**
**பா.வ.எண்.1-4)**

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. இதன் வழி பாக்கு என்பதற்கு கமுகு என்ற பழைமையான பெயரைப் பயன்படுத்தியுள்ளமை தெரிய வருகின்றது. பாக்கு மரம் மிக உயரமாக வளரக் கூடியது என்பதையும் அறிய முடிகின்றது.

### ஆலமரம்

ஆலமரம் தொன்மையான மரமாகும். இதன் கிளைகள் பரந்து விரிந்து கிடக்கும். ஆலமரத்தின் கீழ் மற்ற செடிகள், மரங்கள் முளைக்காது. முளைத்தாலும் அது புக்காது, காய்க்காது, கனியாது என்பர். ஆலமரத்தின் குச்சியால் பல் துலக்க பல் வலிமை பெறுகிறது. ஆலம் பழத்தை பதப்படுத்தி உண்பர். ஆலமரம் வறட்சியிலும் தழைக்கக் கூடியது. மூன்று ஆண்டுகள் கூட மழை இல்லாமல் தழைத்து நின்று நிழல் தரும். தமிழ்நாட்டில் பரவலாக காணப்படும் ஆலமரம் அரபு நாடுகளில் வறட்சியிலும் தழைப்பதை காண முடிகிறது. ஆலமரம் தன்னைச் சுற்றியுள்ள நிலப்பரப்பிலும் விழுதுகளை விழச் செய்து தாங்குவது போல உயர்குண முடையோர் தம் குலம் குன்றாவண்ணம் தாங்குவர் என்பதை,

**"வீங்கு தம்குலம் மெலிவு உறா தாங்குஉயர்நீரார்**
**ஓங்கு தம்குணத்து ஒத்தஇ சூழ்நிலத்தில் தாழ் விழுதே**
**தாங்கு தொன்மரத்து அடிமணல் திண்ணையில்சு**

**(தேம்.மகனேர்ந்த படலம்.**
**பா.வ.எண்.1-3)**

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன.

### ஆச்சா மரம்

ஆச்சா மரம் கடினமான மரவகையைச் சார்ந்தது. இது பாறைகள் நிறைந்த கடினமான நிலத்தில் கூட வளரக்கூடியது. இம்மரங்கள் நீலகிரி, சேர்வராயன, கல்ராயன், மலைப் பகுதிகளில் காணப்படுகின்றன. ஆச்சா மரம் திண்ணிய வைரம் போன்ற மரமாகும். சூசை பாவத்திற்குக் காரணமான ஆசையை ஒழிப்பதற்குக் கண்ணடக்கத்தோடு கூடிய உடலொடுக்கம் துணையாவதன்றி அது அமையாத இடமாற்றம் பயனற்றது என்பதை,

**"சிக்குருவை வித்திய பின் திண்கா ழாச்சா விளைவாமோ**

***செக்குருவை யுண்டுண்டு துகளோ டாசை வளர்ந்தனபின்***
***இக்குருவைக் காட்டியபு வெழுது ங் காவுஞ் சுடுமன்றோ***
***ஒக்குருவை ஒழித்து நசை யொழியு மென்றான்"***
***(தேம்.சித்திரக் கூடப் படலம். பா.வ.எண்.1-4)***

என்ற அடிகள் குறிப்பிடுகிறது. இதன்வழி பலமற்ற முருங்கை மரமும் பலமுள்ள ஆச்சா மரமும் பாவத்திற்கு காரணமான ஆசையை ஒழிப்பதற்கு உடலொடுக்கம் துணையாவதையும் இடமாற்றம் பயனற்றது என்று விளக்குவதையும் காணமுடிகிறது.

## பேரீச்சை மரம்

பேரீச்சை பனை வகையைச் சேர்ந்த ஒரு வகை மரமாகும். இம்மரம் இதனுடைய இனிப்பான பழங்களுக்காக வளர்க்கப் படுகிறது. அரபு நாடுகளில் பயிரிடப்பட்ட பேரீச்சை, தற்காலத்தில் தமிழ்நாட்டில் சில இடங்களிலும் பயிடப்படுகிறது. தேம்பாவணி இசுபானிய மொழியில் எழுதப்பட்ட நூலின் தழுவல் என்பதால் பேரீச்சை மரங்கள் இடம்பெற்றிருக்கலாம். கரும்புகளுக்கு வேலியாக பேரீச்சை மரங்கள் அமைந்துள்ளன. பேரீச்சை இலையால் செய்த ஆடையை முனிவர்கள் மரவுரியாகப் பயன்படுத் தியமையை,

***"குரவத் துகில் குளித்த குரம்பை முனிவர்"***
***(தேம்.சித்திரக் கூடப் படலம். பா.வ.எண்.3)***

என்ற அடி விளக்குகிறது.

## செடிகள்

மரத் திசு பெறாதவை செடிகள் எனப்படும். செடிகள் குறித்து கலைக்களஞ்சியம்,

"செடிகள் என்பவை சிறு தாவரங்கள் ஆகும். ஓரளவு மரப்பொருளான திண்மைத் திசுக்கள் பெற்றுத் தோற்றத்தில் மரத்தை ஒத்த அமைப்பினைக் கொண்டவை பெருஞ் செடி எனப் பெறுவன. இவை குற்று மரங்கள் என்றும் கூறப்படும். இவ்வகை தாவரத்தின் வேரிலும், தண்டிலும் மரத்திசுக்கள் மரங்களிலிருப்பது போன்றே ஓரளவு நன்றாக வளர்ந்திருக்கும். ஆனால் தண்டுப் பகுதி மர இனத்தின் அடிப்பகுதி போன்று பருத்தோ நீண்டோ அமைவது இல்லை"

***(கலைக்களஞ்சியம்இ தொகுதி-4இ ப.234)***

என்கிறது. தேம்பாவணியில் குவளை, சூரிய பந்தி, செவ்வந்திச் செடி பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. குவளை நீர்த் தாவர வகையைச் சார்ந்தது. அல்லியினத்தைச் சேர்ந்தது. குவளை மலர்கள் கண்ணுக்கு உருவகம் செய்யப்பட்டுள்ளதை,

***"கூட நின்று ஓடை தண்குவளைக் கண் திறந்து"***
***(தேம்.நாட்டுப் படலம். பா.வ.எண்.1)***

என்ற அடி சுட்டுகிறது. இதே போன்று சூரிய காந்தி, செவ்வந்தி குறித்த குறிப்புகளும் இடம்பெறுகின்றன.

## கொடிகள்

தாவரப் பெயரீட்டுள் மரம் போன்றே கொடி என்னும் பெயரும் பழமையானது. கொடிகளில் தாமரை, முல்லை, ஆம்பல், காந்தள், மிளகு போன்ற கொடிகள் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. இதில் செழிப்பான மலைப்பாங்கான இடங்களில் வளரும் மிளகின் தன்மை கூறப்படுகிறது. மிளகுக் கொடிகள் மலையில் ஓங்கி வளரும் சந்தன மரத்தில் ஏறிப்படரும் இயல்புடையது. மிளகுக் காயோடு நீண்ட மெல்லிய கொடியினைக் கொண்டிருந்ததை,

***"சுளகொடு சவரம் வீசும் தோற்றமே போன்று வேழம்***
***புளகொடு மதத்தின் சீறிப் புடைத்த தன் செவி கால் வீச"***
***(தேம்.மகனேர்ந்த படலம். பா.வ.எண்.1-2)***

என்ற அடிகள் விளக்குகின்றன.

**புல்லினங்கள்**

புற வைரம் உடையவை புல் என்று கூறப்படும். இதனை,

**"புறக்கா ழனவே புல்லெனப் படுமே"**

**(தொல்.பொருள்.நூ.86)**

என்ற நூற்பா கூறுகின்றது.

**புல்லின் உறுப்புகள்**

தொல்காப்பியர்புல்லின் உறுப்புகளைத் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பளை, ஈர்க்கு, குலை என்று குறிப்பிடுகிறர். இதனை,

**" தோடே மடலே ஓலை என்றா**
**ஏடே இதழே பாளை என்றா**
**ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்**
**புல்லொடு வருமெனச் சொல்லினர்புலவர்"**

**(தொல்.பொருள்.நூ.88)**

என்ற நூற்பா புலப்படுத்துகின்றது. தேம்பாவணியில் கரும்பு, மூங்கில் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. முற்களைக் கொண்ட மூங்கில்கள் சாய்ந்து நின்ற காட்டில் நெருப்புச் சீறி எழுவதைப் போன்று போர்க்களம் எல்லாம் குருதி வெள்ளம் வழிந்தோடியதை,

**"கழை உலர்ந்தவனம் இடைநுழைந்து**
**நுகர்கனல்உடன்ற கதம் எனவும் எல்**
**புழைஅகன்ற வழிவழி சிவந்த புனல்புறம்**
**மறைந்த மருள் இரணமே"**

**(தேம். சேதையோன் வெற்றிப் படலம், பா.வ.எண்.2,4)**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

**தொகுப்புரை**

மரம், செடி, கொடி, புல் போன்றவை தாவரயினங்களாக வரையரை செய்யப் பட்டுள்ளன. உலகில் மனிதன் தோன்றுவதற்கு முன்பே தாவரயினங்கள் தோன்றியிருக் கின்றன. மரங்களில் புளிய மரம், மாமரம், சந்தன மரம், தென்னை, பலா, பனை, ஓமை, முருங்கை, பாதிரி, வேங்கை போன்ற அனைத்து மரங்களின் குறிப்புகளும் தேம்பாவணியில் இடம்பெறுகிறது. தமிழ் நாட்டு தாவரயினங்கள் அனைத்தும் இடம் பெறுகின்றன. காப்பிய மாந்தர்களைக் கூறுமிடங்களில் தாவரயினங்கள் உவமை களாகவும், உருவகங்களாகவும் கையாளப் படுவதைக் காணமுடிகிறது. செடி, கொடி,

புல்லினங்களில் அத்தேசத்தின் தட்வெப்ப சூழலில் வளராதவைகளையும், அரிதானவைகளையும் சுட்டிச்செல்வதை காணமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. மரிய அந்தோணி, வி.(உ.ஆ), தேம்பாவணி, (முதல், இரண்டாம் காண்டம்) வீரமா முனிவர் ஆய்வுக்கழகம், தூயசவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.
2. சீனிவான், கு (உ.ஆ.), சங்க இலக்கியத் தாவரங்கள், தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.
3. கலைக்களஞ்சியம் தொகுதி-4, 8, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
4. இளம்புரணர், (உ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.